ஆகவே, அதே இடங்களில் பட்டா வழங்குவதற்கு தற்போது விதிமுறைகளில் இடமில்லை. எனவே, இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு மூத்த உறுப்பினர் அண்ணன் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள் கூறிய வழிகாட்டுதலுக்கான ஆலோசனையைச் செயல்முறைப்படுத்துவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றனவா என்பது குறித்து ஆய்வுகள் மேற்கொள்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பரிசீலனைக்கு எடுத்துச் செல்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

29—

வாசனை திரவியத் தொழிற்சாலை

***51519—டாக்டர் ப. சரவணன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, வளையங்குளத்தில் மல்லிகைப் பூ வாசனை திரவியத் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவினைப் போற்றி வணங்குகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புகழுக்குப்

2021 பிப்ரவரி 25]

பெருமை சேர்க்கும்வண்ணம், மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது; மாண்புமிகு அம்மா அவர்கள் வாழ்ந்த இல்லம் நினைவு இல்லமாக மாற்றப்பட்டிருக்கிறது; இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாள் அரசு விழாவாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மேலும் பெருமை சேர்க்கும்வண்ணம், நேற்றையதினம் அம்மா அவர்களின் 73–வது பிறந்த நாள் முதன்முறையாக அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது. இவற்றுக்கெல்லாம் காரணமாகத் திகழ்ந்துகொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசைத் தலைமையேற்று நடத்திக்கொண்டிருக்கக்கூடிய குடிமராமத்து நாயகர், இளைஞர்களின் எழுச்சி நாயகர், விவசாயப் பெருமக்களின் பாதுகாவலர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களை முதற்கண் வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கும், இயக்கத்திற்கும், இன்றைக்குத் தூணாகவும், துணையாகவும் நின்று, இயக்கத்தைக் கண்ணும் கருத்துமாகக் காத்து வருகின்ற தென்பாண்டிச் சிங்கம், ஜல்லிக்கட்டு நாயகர், மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தொகுதி, வளையங்குளத்தில் மல்லிகைப் பூ வாசனை திரவியத் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளும் கோளும் நலிந்தோர்க்கு இல்லை; ஞாயிற்றுக்கிழமை கூட எனக்கில்லை என்று ஓய்வறியாது உழைத்து, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்', தமிழகமே தனது இல்லம், தமிழ்நாட்டு மக்களே தன்னுடைய உறவினர்கள் என்று தெய்வ வாழ்வு வாழ்ந்திருக்கின்ற ஒப்பற்ற தலைவி, உங்களையும், என்னையும் ஆளாக்கி அழகுபார்த்த அன்பு தெய்வம், இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின்*

பொன்னடிகளைப் போற்றி வணங்குகிறேன். "இன்று வீழ்ந்துவிடும், நாளை வீழ்ந்துவிடும், இரண்டு மாதம், மூன்று மாதம், நான்கு மாதம்" என்று ஜோதிடக்காரர்களைப் போல தேதி குறித்தவர்களின் கனவைப் பொய்யாக்கி, தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சராக, தன்னுடைய உழைப்பால், ஆற்றலால், திறமையால், செயலால், மதிநுட்பத்தால் ஐந்தாம் ஆண்டிலே அடியெடுத்துவைத்து, ஐந்து ஆண்டுகள் நிறைவு செய்ததற்குப் பின்னாலும், 2021–ல் நடைபெறவிருக்கின்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில், தமிழகத்தின் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார்தான் என்று தமிழக மக்களின் உள்ளங்களில் (மேசையைத் தட்டும் ஒலி) நன்மதிப்பினைப் பெற்றிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், அவருக்கு உற்ற துணையாக இருக்கக்கூடிய மாண்புமிகு தமிழகத்தின் துணை முதலமைச்சர் அவர்களுக்கும், என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினையும், வணக்கத்தினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில் குறுங்குடி, கண்டமங்கலம், பழஞ்சநல்லூர் ஆகிய பகுதிகளில் மல்லிகைப் பூக்கள் நிரம்ப விளைவிக்கப்படுகின்றன. அதைப்போன்று, சிதம்பரம் பகுதியில் இருக்கக்கூடிய பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலும், சி. முட்லூர், சிவபுரி பகுதிகளிலும் மல்லிகைப் பூக்கள் நிரம்ப விளைவிக்கப்படுகின்றன. இந்த இரண்டு தொகுதிகளையும் மையப்படுத்தி, இரட்டை இலையாக, சிதம்பரம் அல்லது காட்டுமன்னார்கோவிலில் மல்லிகைப் பூவை ஆதாரமாகக் கொண்டு ஒரு வாசனை திரவியத் தொழிற்சாலை அமைத்துத் தருவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பெஞ்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் சார்ந்துள்ள காட்டுமன்னார்கோவில் தொகுதியிலும், அருகிலுள்ள சிதம்பரம் தொகுதியிலும், உற்பத்தி ஆகக்கூடிய மல்லிகைப் பூக்களின் அளவிற்கேற்ப, அங்கு ஒரு புதிய வாசனை திரவியத் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை

2021 பிப்ரவரி 25]

வைத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியில் உற்பத்தியாகக்கூடிய மல்லிகைப் பூக்களின் அளவிற்கு ஏற்ப, அங்கு புதிய மல்லிகைப்பூ வாசனை திரவியத் தொழிற்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின், தொழில் தொடங்குவதற்காக தொழில் முனைவோர்கள் முன்வரும்பட்சத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, விதிகளுக்குட்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.*

திரு. பா. நீதிபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் காலங்களில் மனிதப் புனிதராக, தமிழ்த் தாயாக, கருணைத் தாயாக வாழ்ந்து, இன்றைக்கு அனைவருடைய உள்ளங்களிலும், இல்லங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு முன்னாள் முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன். இன்றைக்கு அம்மாவினுடைய ஆத்மாவின் வழிகாட்டுதலின்பேரில், அம்மாவினுடைய ஆட்சியை வழி நடத்திக்கொண்டிருக்கக்கூடிய, தமிழக மக்களால் நிரந்தர முதலமைச்சர் என்று போற்றப்படக்கூடிய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்கி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

என்னுடைய உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதி ரோஜா, மல்லிகை, சம்பங்கி போன்ற பூக்கள் அதிகமான வரத்து உள்ள பகுதியாகும். அந்தப் பகுதியில் வாசனை திரவியத் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று ஏற்கெனவே சட்டமன்றத்தில் கேட்டிருந்தேன். அதைப்போல இந்த முறையும், என்னுடைய பகுதி விவசாயிகளுடைய நலன் கருதி, அரசு வாசனை திரவியத் தொழிற்சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலனை செய்து, ஆவன செய்வார்களா என்பதைக் கேட்டு அமர்கின்றேன்.

[2021 பிப்ரவரி 25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பெஞ்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர் இதைப்போன்ற கேள்விகளைக் கேட்கிறார்கள். அங்கு உற்பத்தியாகக்கூடிய பூக்களினுடைய கொள்முதலுக்கு ஏற்ப, அங்கே புதிய வாசனை திரவியத் தொழிற்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின், அங்கே புதிய தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க முன்வரும்பட்சத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று விதிகளுக்குட்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

30—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம்

***35571—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கென மேட்டுப்பாளையம் வட்டம், சிக்கதாசம்பாளையம் கிராமம், தீர்வை ஏற்பட்ட தரிசு நிலம் புல எண் 522—ல் 1.53 ஹெக்டேர் மொத்தப் பரப்பளவு கொண்ட நிலத்தில் 0.48.5 ஹெக்டேர் நிலம் போக்குவரத்துத் துறைக்கு நில